## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW–15

| | | | |
|---|---|---|---|
| Name | : கீர்த்தி | Caste | : |
| S/o. | : சின்னதுரை | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 11.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது தொளசம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 11.01.2023ம் தேதி தாரமங்கலம் கிராம கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது என்னுடன் கிராம உதவியாளர் வெங்கடேசன் என்பவரும் உடனிருந்தார். அப்போது காலை 6.00 மணிக்கு தாரமங்கலம் காவல் ஆய்வாளர் கைபேசியில் என்னை தொடர்பு கொண்டு தொளசம்பட்டி பிரிவு ரோட்டிற்கு எங்களை அழைத்ததன்பேரில் 6.15 மணிக்கு நானும்

எனது உதவியாளரும் அங்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரியை போலிசார் கைது செய்து வைத்திருந்தார்கள். அப்போது எதிரி தானாக முன்வந்து எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மணி என்பவரை தான் 6 துண்டுகளாக வெட்டி கொலை செய்துள்ளதாகவும் அதை தாரமங்கலம் கிராமம் கருக்கப்பட்டியில் உள்ள குமார் என்பவரின் விவசாய கிணற்றில் போட்டுள்ளதாகவும் கொலை செய்ய பயன்படுத்திய இரும்பு கைப்பிடி கூடிய ஒரு தகர கத்தி, மர கைப்பிடி கூடிய கொடுவாள், கொலை செய்யப்பட்ட மணி என்பவரின் ட்ராயர் டைப் ஜட்டி ஒன்று, ரத்தக்கரை படிந்த பஞ்சு, மணியின் உடம்பை வெட்டி சாக்குபையில் கிணற்றில் போட்ட குமாரின் கிணற்றை அடையாளம் காட்டி தான் வெட்டி போட்ட பாகங்களையும் மணியின் டீ சர்ட், மணியின் பாகங்களை வெட்ட பயன்படுத்திய ஒரு மரக்கட்டை, லுங்கி, பிளாஸ்டிக் சாக்குபை ஆகியவற்றை அடையாளம் காட்டி ஆஜர் செய்கிறேன் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

அதன் பின்னர் தான் தலைமறைவாக சுற்ற பயன்படுத்திய டிஎன்.30 CZ 0252 என்ற வெள்ளை கலர் சுசுகி அக்சஸ் வாகனத்தை ஆஜர் செய்கிறேன் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அதிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. 2வது கையெழுத்து கிராம உதவியாளருடையது. எதிரி மேற்படி இடத்தில் வைத்து ஆஜர் செய்த டிஎன்.30 CZ 0252 என்ற வெள்ளை கலர் சுசுகி அக்சஸ் வாகனத்தை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அந்த மகசரில்

நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அதிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4. இருசக்கர வாகனத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5. டிஎன்.30 CZ 0252 என்ற வெள்ளை கலர் சுசுகி வாகனம் சா.பொ.6 ஆகும். அதன் பின்னர் எதிரியின் வீட்டிற்கு 9.00 மணிக்கு சென்றோம்.

அங்கு எதிரியின் வீட்டிலிருந்து அவர் தான் மறைத்து வைத்திருந்த மர கைப்பிடி உள்ள கொடுவாள், இரும்பு கைப்பிடி கூடிய தகர கத்தி, பச்சை கலர் ட்ராயர் ஜட்டி, ரத்தக்கரை படிந்த பஞ்சு–3, ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை காவல் ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். தற்போது சாட்சி எதிரியின் வீட்டில் ரத்தம் படிந்த ஒரு கோரைபாயை எடுத்து எதிரி ஆஜர் செய்ததாக கூறுகிறார். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அதிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆகும். மர கைப்பிடி உள்ள கொடுவாள் சா.பொ.7, இரும்பு கைப்பிடி கூடிய தகர கத்தி சா.பொ.8, , பச்சை கலர் ட்ராயர் ஜட்டி சா.பொ.9, ரத்தக்கரை படிந்த பஞ்சு–3 வரிசை சா.பொ.10 ஆகும். ரத்தக்கரை படிந்த பாய் சா.பொ.11 ஆகும்.

பின்னர் அன்றே 10.15 மணிக்கு குமாரின் விவசாய கிணற்றுக்கு சென்றோம். அந்த விவசாய கிணற்றில் லட்சுமணன் என்பவர் கிணற்றில் இறங்கினார். கிணற்றில் இருந்த பொருட்களை எடுத்து வெளியே எடுத்தார். மேற்படி பொருட்களை ஆஜர் எதிரி அடையாளம்

காண்பித்தார். ஒரு கிழிந்த நிலையில் இருந்த டீ சர்ட் ஒன்று, ஒரு துண்டு, ஒரு ரத்தக்கரை படிந்த லுங்கி, ரத்தக்கரைபடிந்த மரக்கட்டை, ஒரு பிளாஸ்டிக் அரிசி சாக்குப்பை, ஆகியவற்றை எதிரி அடையாளம் காண்பித்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. 2வது கையெழுத்து எனது கிராம உதவியாளருடையது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆகும். மேற்படி பொருட்களை என்னால் அடையாளம் காண்பிக்க இயலும்.

கைப்பற்றப்பட்ட ரத்தக்கரை படிந்த அரைக்கை டீ சர்ட் ஏற்கனவே சா.பொ.1 ஆகவும் கருப்பு சிவப்பு கோடு உள்ள ரத்தக்கரை படிந்த லுங்கி சா.பொ.2 ஆகவும், கருப்பு மஞ்சள் கட்டம் போட்ட துண்டு ஒன்று சா.பொ.3 ஆகவும், ரத்தக்கரை உள்ள மரக்கட்டை ஒன்று சா.பொ.4 ஆகவும், சாக்குப்பை ஒன்று சா.பொ.5 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளன. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.